**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.94/2016</u>**

பெயர்–திரு.பொன்னுசாமி நாள்.13.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

14.01.1957ம் தேதியில் எனது தாத்தா சின்ன மாரன் உயில் எழுதி வைத்தாக ஆவணம் வா.சா.ஆ–2 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் சொத்து விவரத்தில் மேலே கண்ட இனாம் காலையில் மேல்வாரத்திற்கும், குடிவாரத்திற்கும் சம்மந்தபட்டது என வாசகம் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் தாவா சொத்துக்கள் இனாம் சொத்துகள் என ஒப்பு கொண்டு எழுதி உள்ளார் என்றால் சரிதான். இனாம் சொத்துக்களை பொறுத்து 12.02.1969ம் தேதியில் கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் இனாம் சொத்துக்களை குடிவாரமாக அனுபவித்து வந்தவர்களுக்கு பட்டா வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். 12.02.1969ல் யார் யார் குடிவாரம் ஓட்டி வந்தார்களோ செட்டில்மெண்ட் தாசில்தார் சம்மன் அனுப்பி விசாரணை செய்துள்ளார் என்றாலும், எனது தகப்பனார் பெரிய மாரநாயக்கர் விசாரணையில் கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக எனது தகப்பனார் அப்பீலோ சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனவே 12.02.1969ல் செட்டில்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவு இறுதியானது என்றால் சரியல்ல. எனவே மேற்படி உத்தரவு எனது தந்தை மற்றும் அவரது வாரிசான என்னையும் எனது காலம் சென்ற இளைய சகோதரரின் வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. 1969ல் இனாம் சொத்துக்களுக்கு பட்டா வழங்கியுள்ளதால் அதற்கு முன்பாக தாவா சொத்தை பொறுத்து 14.01.1957ல் உயில் ஆவணம் எழுதுவதற்கு எனது தாத்தா சின்னமார நாயக்கருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 14.01.1957ம் தேதியில் எனது தாத்தா சின்ன மாரநாயக்கர் எழுதிய உயில் செல்லுபடியாகாது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி உயில் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.594/1985 தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா சொத்துக்கள் வ.சா.ஆவணம் 2 ஆன உயில் படி பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். செட்டில்மெண்ட் தாசில்தார் கொடுத்த இரயத்துவாரி பட்டா படி 1ம் பிரதிவாதியின் கணவர் சின்னமாரநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்தை மறைத்து உயில்படி பாத்தியப்பட்டதாக 1ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்தின் உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அ.வ.எண்.594/1985ல் பிறப்பிக்கப்பட்டட தீர்ப்பானை

பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது மற்றும் செல்லாதது என்றால் சரியல்ல. 1985க்கு பின்னிட்டு தாவா சொத்து 1ம் பிரதிவாதி வசம் இருந்தது. தாவா சொத்தை எனக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே விளம்புகை பரிகாரம் ஆனதால் கேட்கவில்லை. ஏற்கனவே பெற்ற விளம்புகை பரிகாரம் சொத்துக்களின் உண்மை தன்மையை மறைத்து பெறப்பட்டதால் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது. அ.வ.எண்.594/1985 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளின் சில நபர்களுக்கு திருமணமாகியிருந்தது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் தாசில்தார் கொடுத்த பட்டா படி 1ம் பிரதிவாதியின் கணவர் சின்னமாரநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து அவரது மறைவுக்கு பிறகு 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரது மற்ற வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.594/1985ல் 1ம் பிரதிவாதிாயின் கணவர் சின்னமாரநாயக்கரின் மற்ற வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்த வழக்கு அவரது மற்ற வாரிசுகளான பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 30 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் தான் ஓட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தோம். 1ம் பிரதிவாதியின் கணவரின் சொத்து என்பதால் தான் 1ம் பிரதிவாதி அவரது கணவரின் மறைவுக்குப் பிறகு தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் வசம் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதால் எனது பரிகாரமானது கால வரையை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது கணவரின் மறைவுக்குப் பிறகு காலம காலமாக அனுபவித்து வந்த சொத்தை தான் கடந்த 08.07.2002ல் 1ம் பிரதிவாதி 2 முதல் 9 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது மகள்களின் மீது அன்பு பாசம் கொண்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் கணவரின் சொத்து என்பதால் வாரிசு அடிப்படையில் 1ம் பிரதிவாதி அவரது மகள்களுக்கு எழுதி கொடுத்திருப்பதாக சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.13 17:56:28 +0530

District Munsif